**S.T.C.225/2020** **26.11.2021**

**வா.சா.1.முனியாண்டி**

**முதல் விசாரணை:**

நான் இந்த புகாரில் புகார்தாரர். எனது முதல் விசாரணையை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். கடந்த 02.06.2020 ஆம் தேதி எதிரி பாரத ஸ்டேட் வங்கி திருமங்கலம் கிளை வங்கி காசோலை ரூபாய் 4 லட்சத்திற்கு என் பெயருக்கு வழங்கிய காசோலையின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.1.** மேற்படி காசோலையை நான் 09.06.2020 ஆம் தேதி எனது வங்கியான பாரத ஸ்டேட் வங்கி வாலாந்தூா் கிளையில் வசூலுக்காக தாக்கல் செய்த ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2.** மேற்படி காசோலை எதிரியின் வங்கியில் போதிய பணம் இல்லை என கடந்த 09.06.2020 ஆம் தேதி திருப்பப்பட்ட மெமோவின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3.** காசோலையில் கண்ட தொகையை கேட்டு 10.06.2020 ஆம் தேதி நான் எனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4.** மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா,ஆ.5.** நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிறகு கடந்த 25.06.2020 ஆம் தேதி எதிரி பொய்யான தகவல்களுடன் எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா,ஆ.6.** புகாா் படி தீர்ப்பாக வேண்டுகிறேன். ( எதிரி தரப்பு வழக்கறிஞர் கோரிக்கையின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது)